**செ.வெ.எண்:51** **நாள்:29.01.2019**

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 6 (ஆறு) சுருக்கெழுத்து தட்டச்சர் (STENO TYPIST) பணிக்காலியிடங்களுக்கு உத்தேச பதிவுமூப்பு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சியுடன் அரசு தொழில்நுட்ப இயக்கக தட்டச்சு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுரக்கெழுத்தில்(SHORT HAND) தட்டச்சில் உயர்நிலை (HIGHER GRADE)

(அல்லது)

தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சில் உயர்நிலை (HIGHER GRADE) தேர்ச்சியுடன் ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சில் கீழ்நிலை (LOWER GRADE) தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

(அல்லது)

ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சில் உயர்நிலை (HIGHER GRADE) தேர்ச்சியுடன் தமிழ் சுருக்கெழுத்து தட்டச்சில் கீழ்நிலை (LOWER GRADE) தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு 01.07.2018 அன்றைய தேதியில் ஆதிதிராவிடர்/அருந்ததியினர்/பழங்குடியினர்/ 18 முதல் 35 வயதிற்குள்ளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் தவிர)/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகியோர் 18 முதல் 32 வயதிற்குள்ளும், பொதுப்பிரிவினர் 18 முதல் 30 வயதிற்குள்ளும் இருத்தல் வேண்டும்.

ஆதிதிராவிட அருந்ததியினர் பெண்கள் முன்னுரிமை உடையவர்கள்: 24.01.2019 வரை பதிவு செய்த ஆதரவற்ற விதவை மற்றும் கலப்பு திருமண முன்னுரிமை பதிவு செய்தவர்களும். பொது பிரிவினர் முன்னுரிமையற்றவர்கள் 30.06.2000 வரையிலும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவுதாரர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். மேற்படி கல்வித்தகுதி, உத்தேச பதிவு மூப்பிற்குட்பட்ட பதிவுதாரர்கள் தங்கள் வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதிச்சான்று, குடும்ப அடையாள அட்டை மற்றும் அனைத்து கல்விச் சான்றுகளுடன் **31.01.2019-க்குள்** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வந்து தங்களது வேலைவாய்ப்பு பதிவினை சரிபார்த்துக் கொள்ளுமாறு **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப**., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**